சேசு மரி சூசை துணை.

அர்ச்சியசிஷ்டவர்களின்

திருவருட்தோத்திரப்பா

முதற்பாகம்.

தஞ்சை

சித்திரக்கவி நாவலரும்,

பாகவதருமாகிய

T. M. துரைசாமிப்பிள்ளை

அவர்கள் இயற்றியது

தஞ்சை

ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திர பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1925.

O6:417
N125
176929

யௌவனர்முதல் விருத்தர் வரையில் உண்டு சுகங்கண்டதும்
அதிசயிக்கத்தக்கதுமான

உடும்புசத்தின் லேகியம்.

ஆரோக்கியம், தேகபலம், புருஷத்துவம், அழகு, ஜீர்ணசக்தி, தேஜஸ், தாதுபுஷ்டி முதலியவைகளைக் கொடுக்கும் ஒப்பற்ற ஔஷதம்.

இந்த உடும்புசத்தின் லேகியத்தில் அயகாந்தம் செந்தூரம் ஸ்வர்ணசெந்தூரம், வெள்ளிபஸ்பம், கல்நார்பஸ்பம், பொன்னம்பர், கஸ்தூரி, பச்சைக்கற்பூரம், மலை மூலிகைகள், விதைகள், வேர்வகைகள், யூனானி மிஸ்றுகள் முதலிய 106--விதமான ஸ்தம்பனத்திற்குரிய கடைச்சரக்குகள் சேர்க்கப்பட்டு அதோடு உடும்பின் சத்தைமட்டும் பசுநெய்யோடு சேர்த்துக்காய்ச்சி இரக்கி அதிகருசிகரமான லேகியமாகச் செய்யப்பட்டிருக்கிறது.

சம்போகத்தில் ஸ்திரீகளை ரமிக்கச் செய்ய நம்மால் முடியவில்லையே என்று இரவும் பகலும் ஏக்கமுடையவர்களும், துரித ஸ்கலிதம்நீங்கி நெடுநேரம்கூடி இன்பத்தை அநுபவிக்கச் சாத்தியப்படவில்லையே என்று அதே விசனமாய்ப் பலவித வியாதிக்கு ஆளாகி நாளுக்குநாள் தேகம் இளைத்துப் போகின்றவர்களும், தேகத்தில் அதிக பலம் இருந்தும் இந்திரிய ஸ்தம்பன யில்லாமல் ஜலம்போல் நீத்துப்போய் துக்கப்படுவோரும் ஸ்திரீகளோடு வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருக்கையிலும், நித்திரையிலும் இந்திரிய ஸ்கலிதமாக தேகம நாளுக்கு நாள் பல ஹீனப்பட்டு சந்தானமின்றி வருந்துவோரும், மேக வெட்டையாலும், வாதாதிக்க தோஷத்தினாலும், சிறு பிராயத்தில் புத்தியீனத்தால் பலவிதமாகச் சிற்றின்ப சுகத்தை அளவுமீறி அனுபவித்ததனால் இந்திரிய சத்துக் குறைந்திருப்போரும், இன்னும் பலவித துர்ப்பிரயோகங்களால் தாமே இந்திரியத்தை வெளிப்படுத்தி அதனால் தேகபலங்குன்றி போகத்தில் அதிக இச்சையிருந்தும் அநுபவிப்பதற்குச் சாத்யப்படாமல் நரம்பு தளர்ச்சி ஏற்பட்டிருப்போரும் இந்த உடும்புசத்தின் லேகியத்தை எமது டைரக்ஷன்

கடவுள் துணை.

விஞ்சையோர் புகழும் தஞ்சை

சித்திரக்கவி நாவலரும், பாகவதருமாகிய

T. M. துரைசாமிப் பிள்ளை அவர்கள்

இயற்றிய

அர்ச்சியசிஷ்டவர்களின்

திருவருட் தோத்திரப்பா.

முதற்பாகம்.

இதில்

அர்ச். ஜெபமாலை மாதா, அர்ச். செபஸ்தியார்,

அர்ச். சவேரியார் சரித்திரம்

அடங்கியிருக்கின்றன.

இரண்டாம் பதிப்பு.

தஞ்சை

"ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திர பிரஸில்"

பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1925. [அணா 4.

Registered.

முகவுரை.

உலகெல்லாம் தனது ஒரு சொல்லால் உண்டாக்கி அவை யாவற்றிற்கும் தானே உயிராய், ஆனந்த மூர்த்தியாய், அனந்த கல்யாண குணசீலனாய் ஆண்டு நடத்திவரும் சர்வேஸ்பரனின் அன்னையாகிய அர்ச். ஜெபமாலை மாதாவின் சரித்திர வரலாற்றை யும், அர்ச். செபஸ்தியார், அர்ச். சவேரியார் முதலான அடியார் களின் சரித்திர வரலாற்றையும் குறித்து உலகிலனைவருமறிந்து பாடித் துதிப்பதற்கும், பக்தி ரஸத்தை யூட்டி பரகதிக்குவழி காட்டுவதற்கேதுவாயுள்ளதுமான அர்ச்சியசிஷ்டவர்களின் "திரு வருட் தோத்திரப்பா" என்னும் தலைமைப் பெயர்பூண்ட இப் பாடற் புத்தகத்தை தற்கால நாகரீக வர்ண மெட்டுகளிலமைத்து வெண்டமிழ் நடையில் சுலபமாய் யாவரும் எளிதில் பாடுவதற் காகவே யான் 1922-ம் ஆண்டிலே இயற்றி வெளியிட்டிருந்தேன். அம்முதற் பதிப்புக் காப்பிகள் யாவும் செலவழிந்து போய்விட்ட மையால் அதன் இரண்டாம் பதிப்புக்காப்பிகளை இயற்றி வெளி யிட்டுள்ளேன். குற்றங்களை நீக்கி குணம் பாராட்டுவீர்களாக.

தற்காலத்தில் நம்மவர்களில் பெரும்பான்மையோர் சங்கீதத் தையே அறியாது மறந்தாற்போலிருந்து வருவதை யோசிக்குங் காலையில் மிகவும் விசனிக்கத்தக்க விஷயமாகவேயிருக்கிறது. ஆக வே தென்னிந்தியாவிலுள்ள நம் கிறிஸ்துவ சகோதர, சகோதரிகள் யாவரும் அதிசீக்கிரம் சங்கீதத்தில் அபிவிர்த்தியாகி எளிதில் பாடும் பொருட்டே, யான் தற்கால நாகரீக அழகிய இந்துஸ்தான், பார்ஸி முதலான பல வர்ணமெட்டுகளிலும், பிரம்மஸ்ரீ தியாக ராஜய்யர் கீர்த்தன வர்ணமெட்டுகளிலும் பாடல்களை அமைத்து "பேரின்ப ஆனந்தகான கீர்த்தனங்கள், சிங்காரப்புகழ்ப்பா" என் னும் தலைமைப் பெயர்கள்பூண்ட கீர்த்தனப் புத்தகங்களையும் இயற்றி வெளியிட்டிருக்கிறேன். ஆகையால் ஒவ்வொருவரும் தவறாது இப்பாடற் புத்தகங்களை வாங்கி, பாடிப் பஜிப்பீர்க ளென்று மிகவும் நம்புகிறேன்.

இங்ஙனம்,

T. M. D.

பாயிரம்.

அருந்தமிழறிந்த அன்பர்களே! சங்கீதத்துக்குத் தாயென விளங்கிவருகின்ற தஞ்சைமாநகரின்கண் வசித்துவரும், நமது சித்திரக்கவி நாவலரும், பாகவதருமாகிய ஸ்ரீமான் **T. M.** துரைசாமி பிள்ளை அவர்கள் சத்தியவேத நண்பர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்கினவர்களாகவே அர்ச்சியசிஷ்டவர்களின் திருவருட் தோத்திரப்பா என்னும் பெயருடைய பாடற்புத்தகமாகிய இந்நூலை இயற்றி வெளியிட்டிருக்கின்றார்கள். இதனை யான் கண்ணுற்ற காலை அர்ச். ஜெபமாலை மாதாவின் மகிமையையும், அன்னவள் தோமினிக் என்னும் குருவானவருக்கு கொடுத்த நூற்றைம்பத்துமூன்று மணியுள்ள மாலையின் பெருமையையும், தாயினது வரலாற்றையும் அர்ச். செபஸ்தியார், அர்ச். சவேரியார் சரித்திர வரலாற்றையும் குறித்து வர்ணித்து சொற்சுவை பொருட்சுவை நிறைத்து, வெண்டமிழ் நடையாகவும் தற்கால நாகரீக நவீன வர்ணமெட்டுகளிலமைத்துள்ள சிறந்த பாக்களாகவும் இயற்றியிருக்கிறார்கள். இப்பாடல்களோ பாடப்பாட தெவிட்டாத இன்பந்தரும் சந்தச்சுவை அமையப்பெற்றதாயுமிருக்கிறது. கற்றோர்கள் யாவரும் இதனைக் கண்ணுறுங்கால் களிகொள்வாரென்றால் மற்றோர்களைப்பற்றி யான் சொல்லவா வேண்டும். நமது நாவலரவர்கள் இயற்றிய இப்பாடற் புத்தகம் சிறியதாயினும், நந்தமிழ் நாட்டுக் கிறிஸ்துவர்களுக்கெல்லாம் இது ஒரு சிறந்த பொக்கிஷம் போன்றதென்பதாகவே காணப்படுமென்பது யான் சொல்லாமலே இதனைக்கண்ணுறும் நமது சத்தியவேத நண்பர்கள் யாவரும் சொல்வார்களென்பது திண்ணமாகும். ஆனதுபற்றி இதை நமது செந்தமிழ் நாட்டுக் கிறிஸ்துவ நண்பர்களெல்லாரும் அவசியம் வாங்கி, இதன் அருமை பெருமைகளை அறிவீர்களென நம்புகிறேன்.

இங்ஙனம்,

D. N. சபாபதி பிள்ளை,

தமிழபிமானி, தஞ்சாவூர்.

REGISTRA

சேசுமரி சூசை துணை.

விஞ்சையோர் புகழும் தஞ்சை

சித்திரக்கவி நாவலரும், பாகவதருமாகிய

T. M. துரைசாமி பிள்ளை அவர்கள்

இயற்றிய

அர்ச்சியசிஷ்டவர்களின்

திருவருட்தோத்திரப்பா.

விருத்தம்.

மன்னவன் தவீது கோத்ர மரபினிலுதித்த தாயே
இன்னிலம் நினது கீர்த்தி இயம்பிட ஆசைகொண்டேன்
சின்மய மான ஞானத் திருவருட் தோத்திரப்பா
வென்னுநற் கீதம் பாட வெனக்கருள் புரிகுவாயே.

வெண்பா.

செல்லடருஞ் சோலைகளுஞ் செம்மைமிகுஞ் சாலைகளு
மெல்லடரு மாலயமு மேய்ந்தொளிரும்—நெல்லடருங்
கருமத்தான் பட்டி கன்னிஜெப மாலை
அருமுத்தே வரமெற் களி.

அர்ச். கபிரியேல் துதி.

நசரேசா நரபதி என்ற வர்ணமெட்டு.

(ஜெயராமா ரெகுபதி என்ற வர்ணமெட்டு.)

3. இராகம்—நாட்டை—தாளம்—ஆதி.

பல்லவி.

கபிரியேல் வானவா கபிரியேல்
காரும்காரும் வாரும்வாரு மேபுவியில் (கபி)

அநுபல்லவி.

அபிரகாம் புதல்வனை
அன்றுவெட்ட நின்றகாலை யேதடுத்த (கபி)

சரணங்கள்.

மரியாயின் மணமதில்
மங்களங்க ளங்குசொல்ல தூதுசென்ற (கபி)

அறிவாளன் வளனது
அந்தரங்க மேதெரிந்து வந்தவான (கபி)

தஞ்சை நகர் வாழ் துரை
சாமிதொழும் சாமிதூத னானவனே (கபி)

அர்ச். தேவமாதா துதி.

ஏசுராஜ நேச என்ற வர்ணமெட்டு.

(ஜலே நாலே நாலே என்ற வர்ணமெட்டு.)

4. இராகம்—தோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

மரி—ஆயே தாயே மாசில்லாமணி மாதவ ஆளுள்
மகளென நீயே வுதித்தாய் ஜெகமதில் தாயே (மரி)

அநுபல்லவி.

பாலுவையே நீமடியாய் வானுடுவை யேமுடியாய்
பாரிலணிர் தவுருவே காருமெனே யேதிருவே (மரி)

சரணங்கள்.

தஞ்சை வியா குல மாதா
தாயே வும்மை போற்றுஞ் சதா
தஞ்சை துரை சாமிபதம்
சாற்றி னேங்கண் பார்க்கொண்ணுதா (மரி)

அர்ச். சூசையப்பர் துதி.

மைமேகச சபுஜாயுரே என்ற வர்ணமெட்டு.

5. இராகம்—தேசிகம்—தாளம்—ஆதி.

பல்லவி.

சூசைமாமுனி நாதனே துணை செய்குவாய் (சூசை)

அநுபல்லவி.

மாசில்லா மரியனை மணவாள னுகினை
வந்தன மேபுரிந்து சிந்தித்தேன் மனதிலுனை (சூசை)

சரணங்கள்.

காசினி யோர்புகழும் கர்த்தனே சுமகிழும்
கானமர் பூங்கோல் கையனே கதிதருவாய் (சூசை)

ராஜனுந் தாவீதின் நற்குலத் திலுதித்தோன்
ஞானிலம் புகழ்தவ யோகனே நாடினேனே (சூசை)

நாசனு கிடுந்துரை சாமிப தம்பாடி
சங்கையு டன்பணிந்து போற்றினேன் தயைசெய்குவாய் (சூசை)

அர்ச். ஜெப்பமாலைமாதா துதி.

மணத்தைவெறுத்து வனத்தில்புகுந்தவா என்ற வர்ணமெட்டு.

(அடுக்குமல்லிகை தொடுக்குமெத்தையிலே என்ற வர்ணமெட்டு.)

6. இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

திரிலோகபர தரிசனமரியே—ஜெபமாலை என்னும்
திருவருள் தரும் சொரூப சுந்தரியே—தினந்

தேடியுந்தனை நாடிவந்தேனே
பாடிவந்தனங் கோடிதந்தேனே

அருமை பெருமை யறிகுவர் பலரே—உந்தனைக் கண்டு
அடிவணங்கியே முடிபணிகுவரே (திரி)

தருமநாத புரமதில் வாழும்—தயா பரியே
தாயே உந்தனின் சேயனைச்சூழும்—பொல்லா

சத்துருபல யித்தரைதனில்
நித்தமேவ ருத்துவதால்

தஞ்சமெனவே கெஞ்சுறேன் தாயே—அதை ஜெயிக்கத்
தருவாய் மோக்ஷ வரமதை நீயே (திரி)

புதுமை பலவும் நிதமுஞ் செய்திட—தேவ தாய்பொற்
பதுமையான விதமுங்கூறிட—இந்தப்

பூமியில் துரை சாமி செந்தமி
ழாமிதையே நாமிதோ பாடி

போற்றியே புகழ்ந் தேற்றினோ மரியே—அனு தினமும்
புண்ணியம்பெற வெண்ணினோமறியே (திரி)

சூசைமுனிமாதவனே காராய் நேராய் என்ற வர்ணமெட்டு.

(சோமசேகரனருளும் பாலாவேலா என்ற வர்ணமெட்டு.)

7. இராகம்—தேசிகதோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

தருமநாத ணக்கரத்தில் தாயே தாயே—வளர்த்த
அருமைஜெப மாலைமாதா நீயே நீயே—மகிழும் (தரு)

அநுபல்லவி.

பரமனையே யீன்றிடவே வந்தாய் வந்தாய்—உலகில்
கருமவினை தீர்க்கவருள் தந்தாய் தந்தாய்—இதோ
தருமதேவ தைபாகின எந்தாய். எந்தாய்—இந்தத்
தாணியோர்க்காய் மனம்வருந்தி நொந்தாய் நொந்தாயுலகில் (தரு)

பக்தர்கள்ஜெ பிக்குஞ்ஜெப மாலி மாலி—ஆன
உத்தமியே சத்யவேத நூலி நூலி—உம்மை
பத்தியாய்து திப்போர்க்கனு கூலி கூலி—நீயும்
சத்துருசங் காரஜெய சீலி சீலி—புகழும் (தரு)

நித்தமுனை சேவைசெய்ய வென்று என்று—தானே
சித்தமகி ழக்குருக்கள் நின்று நின்று—செய்யு
முத்தமபூ சைதனையுங் கண்டு கண்டு—பலரும்
சத்தியின்ம கிமையெனக் கொண்டு கொண்டு—துதிக்கும்(த)

சங்கீதமு ழங்குந்தஞ்சை பூமி பூமி—வாழு
மெங்கள்துரை சாமிதொழும் நேமி நேமி—நீயும்
மங்களமா யேசுநாத சாமி சாமி—தனைப்
பங்கமில்லா மலேஈன்ற வாமி வாமி—மகிழும்(தரு)

வானவா காபிரியேல் என்ற வர்ணமெட்டு.

(தாதாபாய் சௌவரோஜி என்ற வர்ணமெட்டு.)

8. இராகம்—தேசிகதோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

மாதாவே ஜெப மாலை (மாதா)

அநுபல்லவி.

வந்தோமாதரி எந்தாயேமரி (மாதா)

சரணம்.

சாதக மாக்கிடவே
பாதகம் போக்கிடவே
சருவஞான மரியனைத்திரு
தருமநாத னைக்காமுரு (மாதா)

தோகையரு.

மந்திரஞ் ஜெபிக்கஜெப மாலையைக் கொடுத்ததவ
மாமரி அன்னை நீயே
தந்திர மாயலகை தனைஜெயித் திடவுலகில்
தந்தனை தபமாலை தாயே.

சரணத்தோடர்.

நாத்தியம் பத்திமூன்று
கோர்த்தம ணியையன்று
நாதனத்தவ சாதனமென
மாதவகுரு நாதர்க்கீந்த (மாதா)

தோகையரு.

மன்னவன் தாவீது குலமதில் பிறந்துநல்
வரங்களால் விளங்கிடுந் தாயே
இன்னகர் போற்றிடு மெழில் சௌந்தரியா
யிலங்கிடுந் தயாபரி நீயே.

சரணத்தொடர்.

தஞ்சை ந கரில்வாழும்
விஞ்சையோர் கள்புகழும்
தாசனுந்துரை சாமிக்குகந்த
நேசசறகுண ராஜன்புத்திரி. (மாதா)

அர்ச். ஜெபமாலை மாதா காக்ஷி.

இப்புவிமீதிலொரு என்ற வர்ணமேட்டு.

(செந்தமிழையுலகினில் என்ற வர்ணமெட்டு.)

9. இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

தருமநா தனையீன்ற அருஞ்செப மாலையென்னும்
தாய்மரி தன்னின் கதையே—உலகறிய
வாய்விட்டுச் சொல்வோமதையே
சத்தியவேதம னுத்தமனுங்குரு
இத்தாலியநகர் பக்தனுமாகிடும்
சாமிநா தரின் சஞ்சலம்—தீர்க்கவே வந்த
நேமிதா வீத னின்குலம் (தரு)

தாவீத ரசன்கீதம் மேவியு லகில்சாமி
நாதரு மன்புடன் பாட—அல்பெசஞ்சு
பாதகர் சண்டைகள் போட
நாட்டைவிட்டிவர் வாடியமனமொடு
காடதிலுங்கீதம் பாடித்துதித்திட
நாடிப்பி ரசன்ன மானாள்—மரிஓர்மாலை
சூடித்த ரிசன மானாள் (தரு)

வெண்டாம றைகளொத்த வெண்பட்டா டைதரித்து
விளங்கிடுங் கன்னி யர்களாய்—மூவைம்பதுபே
ரிலங்கினர் விண்ண வர்களாய்

வெள்ளை சிகப்பொடு நல்லபொற் சரிகை
யுள்ளபட் டாடைமேற் சல்லா வணிந்து
விதவித மாகவே நின்றார்—தோமினிக்சாமி
இதமாய தையுமே கண்டார் (தரு)

சீஷர்க ளோர்வலையை வீசிட வேகடலில்
சித்தம கிழவுங் கொண்டார்—மூவைம்பதுமீன்
சுத்தவ லையதில் கண்டார்

சேசு அன்னைமரி பாசமுடனறிந்
தாசை ஜெபம்புரி நேசமாலைக்கிந்த
சித்தாந்த மொப்பனை யென்று—உபதேசித்து
விர்த்தாந்தஞ் செப்பினு ளன்று (தரு)

காட்சியைத் தானேகண்டு மாட்சியாய் சாமிநாதர்
கானகம் விட்டு விடவே—கோவிலில் மணி
தானுய டியும் படவே

கண்டதை யேதான் மண்டல மீதினில்
எண்டிசை யறிய கொண்டுப தேசங்
கமழுங்க தையிதோ பாராய்—துரைசாமிசொற்
றமிழின்க விக்க ருளுவாய் (தரு)

மாதாவின்மேல் கும்மி.

---

10. இராகம்—சுருட்டி—தாளம்—ஆதி.

1. அருமையா னத்திருக் கிருபைநி றைமரி
ஆலயத் தின்ஜெப மாலையின்மேல்
சிறுவன்து ரைசாமி செந்தமிழ்க் கும்மியை
செப்புகி றேன்கேளும் ஞானப்பெண்ணே

2. நாயகி யாமொளிர் தூயகற் பின்மணி
நற்கனி யாந்தேவ ராக்கினியாம்
நேயசு வைக்கினு மன்னம்மா ளும்பெற்ற
நித்திலமாம் பாரும் ஞானப்பெண்ணே

3. மீனேறு சென்னியும் விண்ணோர் மதியும்
மிதியடி யாகவே கொண்டவளாம்
பானேறு மெய்யு முடையாளா கித்திரு
பாமனை ஈன்றாளாம் ஞானப்பெண்ணே

4. நற்றவந் தன்னிலே யுற்றவனுஞ் சூசை
நானில மும்புகழ் வானவனும்
கொற்றவ னும்வரம் பெற்றவனை மரிக்
கொழுனனுப் கொண்டாளாம் ஞானப்பெண்ணே

5. தீராத செல்வமாய் தேவாதி தேவனைத்
தன்மக னுகவே கொண்டவளாம்
பூவாதுகாய்க்குங் கொடியதைப் போலிவள்
புதுமையாய் வந்தாளாம் ஞானப்பெண்ணே

6. சத்திய வேதத்தி னுத்தம னோர்குரு
சாமிநா தரெனும் தோமினிக்கி
பத்தியா கஜெப மாலையை நேரினில்
பரிசாய ளித்தாளாம் ஞானப்பெண்ணே

7. நாடோறு மேநாமு மீடேற வேமரி
நன்மையாய் சாமிநா தர்மூலமாய்
வீடோறு மேஜெப மாலைத வறுமல்
வேண்டிடச்செய்தாளாம் ஞானப்பெண்ணே

8. ஆதிப்பி தாச்சுதன் சோதியெ னுமேக
ஆண்டவர் தன்னைய டைந்திடவே
நீதியு டன்மரி தான்தப மாலையை
நேயர்க்கு ஈந்தாளாம் ஞானப்பெண்ணே

9. சூட்சுவழியிது மோட்சம டையவே
சொன்னேன் சொன்னேன்புவி தானறிய
சாட்சியா குஞ்சாமி நாதரின் போதனை
சத்தியம் சத்தியம் ஞானப்பெண்ணே

10. சங்கித மேபுக ழெங்கினு மோங்கிடுந்
தஞ்சைந கர்துரை சாமிசொல்லும்
மங்களக் கும்மியைப் பாடினு லேவ்வுயர்
வாழ்வுபெ றலாமே ஞானப்பெண்ணே

ஜெபமாலையின் மாட்சி.

ஏசுபரன் வருகையை என்ற வர்ணமெட்டு.

(வெள்ளிமலை யொத்தபல மேடை என்ற வர்ணமெட்டு.)

11. இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

காலைமாலை வேளைதவ ராமல்—தினம்
வேலைசெய்யும் போதுமற வாமல்—ஜெப
மாலையதை யேஜெபிக்குங் காலையருள் மோட்சமதை
நாமே—அடை—வோமோ (காலை)

ஆலையெனு மெந்திரத்தில் கரும்பு—நின்று
பாலைத்தரு வதுபோல விரும்பு—மன
மாலையெனு மாலைஜெப மாலையைக்கொ டுத்துநின்று
நாடு—அருள்—தேடு (காலை)

தபத்துக்கு ரியமாலை யென்றே—மரி
ஜெபத்துக்கெ னக்கொடுத்தா ளன்றே—பூவில்
அபத்தங்க ளுமழியும் பவத்தொழி லுமொழியுங்
காட்சி—இது—சாட்சி (காலை)

உபத்திர வமளிக்கும் பேய்கள்—சில
தபத்தின் ரைக்கெடுக்கும் நாய்கள்—மாலை
ஜெபித்துமே நாமதையே ஜெயிக்கலா மேயருளைத்
தேடி—மனம்—நாடி (காலை)

தற்பரம தாயினருள் மாலை—அது
அற்புதம்நி றைந்தஜெப மாலை—இன்னம்
பற்பலபி ணியகற்றி கற்பெனும கிமையூட்டும்
மாலை—தப—மாலை (காலை)

சற்குணவான் தஞ்சைதுரை சாமி—தமிழ்
சொற்பெருமை தானறியும் பூமி—பத்து
கற்பனைக்கு ஒத்தவாறே பத்துமணி யென்றறிவோந்
தானே—நிஜந்—தானே (காலை)

176929

செந்தின்மா நக ரந்தனில் மேவிய என்ற வர்ணமெட்டு.

12. இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

தருமநா தபு ரந்தனி லேவளர்
தாயே ஜெபமாலை நீயே—என்னைத்
தற்காத்த ருளுமன் பாயே—உன்னைத்
தஞ்சமென் றிதோ கெஞ்சுறேன்மன
சஞ்சலங்களை யகளைந்திடக்
காரணி மீதி லேகிருபை செய்யப்
பூரணி யேவரு வாயே—அருள்
காரணி யேதரு வாயே (தரு)

அருமையா னகா பிரியேல் வானவன்
ஆசீர்வதித் தும்மைப் போற்றி—வாழி
அன்றுமே கூறினு னேற்றி—மேலும்
அந்தரம்புவி விந்தையாய்ப்பரன்
பந்தமாபொரு சுந்தரபாலனுய்
அன்னையே முன்ன முன்னிட மேவர
எண்ணங்கொண் டார்மிக சாற்றி—வானேன்
தன்னைய னுப்பினுர் தேற்றி (தரு)

பெருமையா னபு கழ்நிறை மந்திரம்
பேருலகி லிதைத் தானே—பரன்
பிரியமா யுமக்களித் தானே—அதைப்
பெற்றுமேஜெய நற்றவந்தனை
யுற்றவர்க்கென பற்றளித்தனை
பிரபல தஞ்சை வாழுந் துரைசாமி
பேரின்பப் பாடலைத் தானே—பாடி
பிரியமாய்ப் போற்றிசெய் தேனே (தரு)

அர்ச். செபஸ்தியார் சரித்திரம்.

விருத்தம்.

பண்டுபரா பரனமைத்த சோலையினிற் பசாசெனும்
பாம்பி னலோர்
பெண்டுசெய்த பவமொழிக்க மனுவுருவா யிறந்துயிர்த்த
பிரானை வேண்டித்
தொண்டுபுரிந் தொளிர்செபஸ்தி யாரேவுந் திருவடிகள்
துணையாய்ப் போற்றி
அண்டுமெனக் கிறங்கிவர மளித்திடவே இவ்வுலகில்
அருள்செய் வீரே.

அர்ச். செபஸ்தியாரின் மகத்துவச் செயல்.

(சுபராஜீயமதிகதூரமிலை என்ற வர்ணமெட்டு.)

13. இராகம்—இந்துஸ்தான் கமாசு—தாளம்—ஏகம்.

பல்லவி-

திருவடிதனைத்தொழச் செய்வீர் செபஸ்தியாரே
தின்மை யகற்றியருள் புரிகுவீரே (திரு)

அநுபல்லவி.

சருவதயாளகுணை சம்பன்ன சீலரே
சத்தியமானதைக்கைக் கொண்டவரே (திரு)

தொகையரு.

நலமுறும் நற்போன் நகரினி
லுதித்த கெம்பீரனே
நல்லபோர்ச் சேவகனய் நாடிய
நயன சிங்காரனே

அநுபல்லவித்தொடர்.

வேதத்திற்காயவஸ்தைப் படுவோர்க்கிறங்கினவா
வேணவுதவிசெய்ய விரும்பினவா (திரு)

தொகையரு.

ஆறுவருஷ காலம்வாய் பேசாது
அடைபட்ட பெண்ணைத்தானே
ஆச்சர்ய மாகவே பேசவேசெய்த
அர்ச்சியசிஷ்ட பூமானே

அநுபல்லவித்தொடர்

மாற்குஸ்மர்செல்லியானுஸ் ஸும்மைக்கண்டிருவர்கள்
மனத்திடமாகவிசு வசித்தார்கள் (திரு)

தொகையரு.

உரோமி னதிகாரி கிரோமாசியுஸ்
உபாதையைத் தீர்த்தவா
உயர்ஞான தீட்சைதந் தவனையிவ்
வுலகிலே காத்தவா

அநுபல்லவித்தொடர்.

தஞ்சையில்வாழுந்துரை சாமிகவியைப்பாடி
சரணஞ்செய்தேனும்மைத் தினந்தேடி (திரு)

உரோமாபுரியரசன் அர்ச். செபஸ்தியார்பேரில் அம்பெய்ய ஆக்கியாபித்தல்.

மாதவன் சுவைக்கினின் சேயே என்ற வர்ணமெட்டு.

(பாண்டியன் ஈன்ற மீனாட்சி என்ற வர்ணமெட்டு.)

14. இராகம்—அமீர்கல்யாணி—தாளம்—ஆதி.

பல்லவி.

உத்தமன்—செபஸ்தியார் பாதம்—பணிந்தோம்
உண்மையாய் நிதம் (உத்த)

அநுபல்லவி.

சத்திபன்—போதித்த போதம்—ஏசுவின்
சத்திய வேதம் (உத்த)

தொகையறு.

உரோமா புரியரச னும்மையே வாதிக்க
வுறுதியாய் மனதிற் கொண்டான்
உண்மையாய்க் கிறிஸ்துவ னென்றுமைக் கண்டுதன்
னூழிய னல்ல வென்றான்

பல்லவியெடுப்பு.

கட்டளை—விட்டனன் அன்றே—ஸ்தம்பத்திற்
கட்டிட வென்றே (கட்ட)

அநுபல்லவியெடுப்பு.

இட்டமாய்—அம்பதால் கொன்றே—வருவீ
ரென்றனன் நன்றே (உத்த)

தொகையறு.

வேதனை யாலுயிர் விட்டீரென் றேவீரர்
விரைவினில் வீடு சென்றார்
விதவையாம் ரேனல் இரவினி லும்மையே
வீட்டுக் கழைத்து சென்றாள்

பல்லவியெடுப்பு.

சாற்றுவோம்—தஞ்சை துரைசாமி—சங்கீத
சாஹித்யம் சாமி (சாற்)

அநுபல்லவியெடுப்பு.

போற்றுவோம்—புண்யா வுமைபூமி—கொண்டாடி
புகழுதே நேமி (உத்த)

அர்ச். செபஸ்தியாரை தடியாலடித்துக் கொல்லுதல்.

வாசமலர் வீசுங்கொடி என்ற வர்ணமெட்டு.

(பொன்னுலவும் பன்னிருகைவேலா என்ற வர்ணமெட்டு.)

15. இராகம்—இந்துஸ்தான்பியாகு—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

தவத்திலுறுஞ் செபத்தியெனுஞ் சாதா—புகழ்
சத்தியசத்தி னுத்தமநற் போதா—வேத
சாட்சியானீர் காட்சியேவி னேதா—நீரும்
தடிகளா லடிகள்பட்டு மடியவுயிர் நொடியில் விட்டத்
தங்கநிறத் தண்கமலப் பாதா—அருள்
தங்கிநிறை பொங்கும்பிர சாதா (தவ)

நற்றவத்தி லுற்றிடுமெய் யாரா—உம்மை
நம்பினவர்க் கன்பளிக்குந் தீரா—இந்த
நானிலமுந் தான்மகிழும வீரா—இதோ
நாடிப்புவி தேடித்தினம் பாடிக்கவி சூடுந்துரை
சாமிபுகழ் நேமியேவு தாரா—வளர்
நற்போனெனு மற்புதநல் லூரா (தவ)

அர்ச். சவேரியார் சரித்திரம்.

விருத்தம்.

வண்டுகொண்ட கானகந்தன் வண்டினை போக்காதென்று
மதித் துருமல்
தொண்டுபரற் கியற்றுநெறி இஃதென்றிந் நாட்டோர்க்குந்
துலங்கக் காட்டி
அண்டுமெளி யவர்குறைகள் பலபோக்கித் தனதுதிரு
சாழீ விழப்
பண்டுநண்டு கொண்டுதரக் கண்டுநின்றேன் இண்டையடி
பழிச்சு வாமே.

அர்ச். சவேரியார் நாவாரா நாட்டில் பிறந்து கல்விகற்க
பாரீஸ் நகரம் வருதல்.

(அன்னம்மா ளின்மகள் என்ற வர்ணமெட்டு.)

16. இராகம்—நாதநாமக்கிரியை—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

நானிலம்புகழும் நாவாரெனுமுயர்
நாட்டினி லொருபூமான்
தானவர்சவரி யாரெனுஞ் சீமான்
தந்தையை இழந்தவனும் (நா)

கலைக்கியான நூல் கற்றிடவேதான்
கருத்தினிலே கொண்டார்
கவிஞனெனப்பே ரெடுத்திடில்பெரிய
கியாதியெனக் கண்டார் (நா)

வடதிசைநோக்கி வங்கனர் பிரான்சீஸ்
வாத்தியா ரிடந்தேடி
தடமதாம்பாரீஸ் நகரதில்கல்வி
தான்கற்றி டவேநாடி (நா)

விஞ்சையோர்மகிழும் வித்துவானெனவே
விளங்கினர் துலங்கிடவே
தஞ்சைநகர் துரை சாமி சொற்பாடினேன்
சத்தியம் விளங்கிடவே (நா)

அர்ச். சவேரியாரை அர்ச். இஞ்ஞாசியார் மனந் திருப்பிய சுவிசேஷ வாக்கியம்.

(ஆயேமுஜேதர்தேஜி என்ற வர்ணமெட்டு.)

17. இராகம்—இந்துஸ்தான்தோடி—தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

அவனியெலா மோர்மனித னுண்டானுந் தானே—அவன்
ஆத்துமங் கெட்டு நரகில் வீழ்ந்தால்—ஐயோ
அவனுக்கு வரும்பயன் ஆக்கினை தானே—அவன்
ஆத்துமங் கெட்டு நரகில் வீழ்ந்தால் (அவ)

தொகையறு.

ஆண்டவர் வாக்கியம் அறைகுறேன் அறைகுறேன்
அன்புடன் தானே
ஆனதா லாபத்து ஆபத்து அறிவீரென்
கல்வி மானே

பாட்டு.

அனுதினமு மிஞ்ஞாசியா ரறைந்தவாக்கைத்தானே—கண்டு
அன்பன் துரைசாமி அரும்பகமுரைத்தேனே (அவ)

பாரீஸ்நகரின் கோட்டைவாசல் முன்னிருந்த தேவாலயத்தில் பாபா இராயப்பர் பலிபூஜைசெய்ய அர்ச். சவேரியார் வார்த்தைப்பாடு கொடுத்தல்.

18. வாரணங்கள் நிறை என்ற தாட்டி.

அஞ்சனிகீதம்.

அன்பனிஞ்ஞாசியார் அடிவணங்கியே செல்ல
அவருடன் கூடினர் சவரியாரும் நல்ல (அன்)
இன்பமுடனே மோன் மார்த்தரெனுங்கோவில்
ஏகினரே ழு பேர்களுடன் சொல்ல (அன்)

அர்ச். சவேரியார் ஜேருசலமேனும் திருஸ்தலத்தைச் சேவிக்க
பிரயாணமாய் நடந்துவருதல்.

படுக்கையைவிட்டு என்ற வர்ணமெட்டு.

(செப்பிரி ராஜரி அண்ணு என்ற வர்ணமெட்டு.)

19. இராகம்—மோகனம்—தாளம்—ஆதி.

பல்லவி.

ஜெருசலம் நகர் நாடியே—பாரிஸைவிட்டு
திருஸ்தலம் சென்றார் கூடியே (ஜெரு)

அநுபல்லவி.

அருமையாய் சவேரியார் அன்பாரறு பேருடன்
ஆனந்த மாகப்பர மானந்தத் தோழருடன் (ஜெரு)

சரணம்.

உத்தமர்கள் தடி கைதனிலெடுத்து
உகந்திடும் நற்செப மாலை தொடுத்து
சித்தமும் மனமு மொத்துக் கொடுத்து
சென்றனர் பல பல வூர்க ளடுத்து (ஜெரு)

எத்திசையும் புகழ் வேனிஸில் நாட
ஏழுவாரமா யிவர்களும் வாட
சத்தியமாய் பரன் தன்னை மன்றாட
தஞ்சைவாழ் துரை சாமியும் பாட (ஜெரு)

அர்ச். சவேரியார் வேனிஸ் நகரத்தில் குருப்பட்டம் தரித்து
உரோமாபுரிசென்று அர்ச். பாப்பானவர் உத்திரவுப்படி
இந்தியாவிற்கு புறப்படுதல்.

விருத்தம்.

கப்பல்தான் போகாதாலே கனதுயரடைந்து ரோமைக்
கப்பவே சென்றாரங்கு அன்புடனேற்றார் பாப்பு
செப்பிடும் போர்ச்சு வேந்தன் சித்தம்போ லிந்துதேசம்
ஒப்பியே சவேரியாரை உறுதியா யனுப்பினரே.

கப்பலில் வரும்போது அர்ச். சவேரியாருக்கு ஆபிரிக்கா தேசத்தில் மெலின்டா வென்னும் ஊரில் மகம்மதியர் கோரிகள்மேல் பொற்சிலுவை காணுதல்.

20. ராமனே பாலகன் என்ற தாட்டி.
மத். 18—5.

ஸாக்கி.

மகம்மதியர்கள் கோரிகள்மேலே
மாட்சியாய் கற்றா னுச்சியின்பாலே
மரகத வயிர சிலுவை பொன்னாலே
வளர் மெலின்டாவில் கண்டனன்பாலே
சாதுஜீசுனேசாது.

அர்ச். சவேரியார் கோவைக்கு வருதல்.

ஸாக்கி.

கோவையில் பிரான்சிஸ் ஆவலாய்ச் சென்று
குழந்தைகளைக் கூட்டி தான் நின்று
தேவனைப்போற்றி ஜெபித்திடவென்று
செப்புவார் ஜெபங்கள் தினந்தினமென்று
சாதுஜீசுனேசாது.

அர்ச். சவேரியார் கோவாதேசத்து பிள்ளைகளுக்கு மந்திர உபதேசம் செய்துவைத்தல்.

பார்புகழ்வேளை என்ற வர்ணமெட்டு.

(ஜப்தகலந்திரு என்ற வர்ணமெட்டு.)

21. இராகம்—இந்துஸ்தான் கமாசு—தாளம்—ஏகம்.

கண்ணிகள்.

கும்மியடிப்போம் குழந்தைகளே வாங்கள்
கும்மியடிப்போம் குழந்தைகளே
நம்மிறைவன் யேசு நாமத்தைப்போற்றி
நாம் கும்மியடிப்போம் குழந்தைகளே (கும்)

உன்னத பரமண் டலங்களிலிருக்கிற
உத்தமரே யும தருள் பெருக
உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாய்
உம்முடைய ராட் சியம் வருக (கும்)

உம்முடைய சித்தம்பர மண்டலத்திலே
உம்மால்செய்யப் படுமாப்போ லிங்கிலத்திலே (கும்)

அன்றன்றுள்ள எங்களப்பம் எங்களுக்குமே
இன்றுதாரு மெங்கள்கடன் காரர்கட்குமே (கும்)

நாங்கள் பொறுக்குமாப் போலெங்கள் கடனை
நாதனே பொறுத்தருள் புரிவீரே
நற்றமிழுணர் துரை சாமிசொற் பதமே
நாடியே படித்தோ மறிவீரே (கும்)

அர்ச். சவேரியார் கன்னியாகுமரி வரையிலும் கடற்கரை ஓரமாயுள்ள பரதகுல ஜனங்களுக்கும் முக்குவ ஜனங்களுக்கும் உதவிபுரிந்து ஞானஸ்தான மளித்தல்.

தவமே புரிந்திடும் என்ற வர்ணமெட்டு

(மயிலே வடிவேலனேடெதிர் என்ற வர்ணமெட்டு.)

22. இராகம்—மால்கோஷ்—தாளம்—சாப்பு.

பல்லவி.

கவலேயிருந்தே கப்பல்தனிலேறி (கவ)

அநுபல்லவி.

கன்னியாகுமரி கதிபெறக்கோறி
கண்டாரேபல பரதகுலத்தாரை நேரில் (கவ)
தன்மகன் மரிக்க ஆயவள் துடிக்க
சவரியாரளித்தார் வரமதுயிர்க்க (கவ)

முக்குவ நற்றார் முழுதிலும் கற்றார்
முறையாய்வந்து ஞானஸ்நானமுமே பெற்றார் (கவ)

அக்யானம் விட்டார் அரூபியாய் விட்டார்
அலகைகளின் மந்திரச் சுவடிகள் சுட்டார் (கவ)

நெஞ்சமகிழ்ந்தார் கொஞ்சிப்பணிந்தார்
தஞ்சை துரைசாமி கவிபால் புகழ்ந்தார் (கவ)

அர்ச். சவேரியார் மலாக்காவிலிருந்து அம்போயினு என்னும் தீவுக்கு சென்று அநேகரை மனந்திருப்பி சேராம் என்ற ஓர் தீவுக்கு தோணியிலேறிப்போகையில் நடந்த அதிசயம்

கார்காருமேகநாத என்ற வர்ணமெட்டு.

(ஜோர்தூர என்ற வர்ணமெட்டு.)

23. இராகம்—சிந்துபைரவி—தாளம்—ரூபகம்.

பல்லவி.

பார் பார் பெரும் புயல்தான் படகைத் தாக்குதே (பா)

அநுபல்லவி.

பலதிக்கிலு மழைகளடிக்க பலமாய்மின்னல் இடிகள் இடிக்க (பா)

சரணம்.

பலருமங்கு அலறிக்கதறி பக்தன் பிரான்சிஸ் பாதம் வேண்ட (பா)
கழுத்திலிருந்த சுரூபந்தன்னை கழட்டிக் கடலி லமிழ்த்ததானே (பா)

பல்லவியெடுப்பு.

பார் பார் பெரும் புயல்தான் பயந்து போனதே (பா)

அநுபல்லவியெடுப்பு.

கடலி லமிழ்த்தின சுரூபக் கயறு அறுக சுரூபம் விழுகப் (பா)
காற்றும் புயலு மமர்ந்து போக கரையை நோக்கிப் படகுபோக()
தஞ்சைவாழுந் துரைசாமி தாசன் கவியை சாற்றினேனே (பா)

சிலகாலம் சென்றபின் அர்ச். சவேரியாரும், ரோத்ரிகேஸ் என்ற ஓர் போர்ச் சேவகனும் கடற்கரையோரமாய் சென்றபோது

கண்டகாட்சி.

24. தயலாகிலோட்டதா என்ற தாட்டி

திண்டி.

அலைமேல் மிதந்தோர் நண்டுதானே
அன்பாய் சுரூபம் கௌவிக்கோன
அருகில் வைக்கச வரி தானே
அதை ஆசீர்வதித்த னுப்பினனே (அலை)

அர்ச். சவேரியார் நஸ்ஸாலோட் என்ற தீவுக்கும், தேர்நாத் என்ற தீவுக்கும் சென்று சத்தியவேதத்தைப் போதித்து சான்சியன் தீவுவந்து பாக்கியமான மரணமடைதல்

(1552)

(உடன்பிறந்ததினலே என்ற வர்ணமெட்டு.)

25. இராகம்—அசாவேரி—தாளம்—ஆதி.

பல்லவி.

சான்சியன்தீவில் வந்தார் சவரியார்தேகம் நொந்தார்
கரையில் படுத்தவஸ்தை பட்டார் (சான்)

அநுபல்லவி.

தானவரும் சுரத்தால் தைரியமற்றிருக்க
சீனதேசத்தோனை சீஷனருகிருக்க (சான்)

சரணம்.

டிசம்பர்மாத மிரண்டாந் தேதி வெள்ளிக்கிழமை
செல்வ னுயிர் துறந்தார் தானே
திசைகளெங்குமகிழ திருவுடலைப்புகழ
சிறப்பாய்பெட்டியில்வைத்து சேர்த்தனர் கோவைநகர் (சான்)

நெஞ்சமகிழ வும்மை நிதமுங்கொண்டாடிப்பாடும்
தஞ்சை துரைசாமியின் குருவே
சஞ்சலம்போக்கிடுவீர் தனையரைக்காத்திடுவீர்
சாமிசவரியாரே தயையருள்புரிவீரே (சான்)

மங்களம்.

(இந்த உடம்பை நம்பி இருக்கலாமா என்ற வர்ணமெட்டு.)

26. இராகம்—இந்துஸ்தான் காப்பி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

மங்களம் மங்களம் மங்களமே
திங்கள் மிதித்தாட்கு மங்களமே (மங்)

திரு ஜெபமாலை அன்னைமரிக்கும்
தருமருள் ஏசு பரனுருக்கும் (மங்)

உத்தமராம் சாமி நாதருக்கும்
சத்தியவேத நல் போதருக்கும் (மங்)

மண்ணிலிப்பாடல் பஜிப்பவர்க்கும்
எண்ணம் மாறுமல் ஜெபிப்பவர்க்கும் (மங்)

திருவருட் தோத்திரப் பாக்களென்பார்
தரும் ஜெயமே துரை வாக்கு யென்பார் (மங்)

சித்திரக்கவிதுரை சாமிபோற்றும்
சத்தியவேதத்தி னுண்மைசாற்றும் (மங்)

முற்றிற்று.

இதன் இரண்டாம் பாகம் கூடியசீக்கிரம் வெளிவரும்.

விஞ்சையோர் புகழும் தஞ்சை

ஆனந்தகான பஜனை சபா தலைவரும்

சித்திரக்கவி நாவலரும், பாகவதருமாகிய

T. M. துரைசாமிபிள்ளை அவர்களால்

இயற்றப்பட்ட

			ரூ. அ. பை.
1.	பேரின்ப ஆனந்தகான கீர்த்தனங்கள்	I பாகம்	0—6—0
2.	,, ,,	II பாகம்	0—6—0
3.	சிங்காரபுகழ்ப்பா	...	0—6—0
4.	திருவருட் தோத்திரப்பா	I பாகம்	0—4—0

இவை மதுரம் பழுத்துத் தேன்றுளிக்குஞ் சந்தச்சுவை, சொற்சுவை, பொருட்சுவைகளோடும், தற்கால நாகரீக அழகிய இந்துஸ்தான், பார்ஸி, காவடிச்சிந்து முதலான பல வர்ணமெட்டுகளோடுங்கூடி பக்திரஸத்தை யூட்டி, பரகதிக்கு வழிகாட்டும் இன்றியமையாத இனிய பாடற் புத்தகங்கள் இவைகளே.

புத்தகம் வேண்டுபவர்கள் கீழ்கண்ட எமது விலாஸத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தவக்கமன்னியில் வி. பீ மூலமாயனுப்பப்படும்.

T. M. துரைசாமி பிள்ளை,
சித்திரக்கவி நாவலர் & பாகவதர்,
கருந்தட்டாங்குடி போஸ்டு,
வலம்புரி, தஞ்சாவூர்.

176929

எம். உமர்சா சாயேப் அண்டு சன்ஸ்

அத்தர்வியாபாரம் தஞ்சாவூர்.

எமது கம்பேனி நீண்டகாலமாக வாசனைவியாபா[...] [...]து மஹா ராஜாக்கள், ஜட்ஜிகள், ஜமீன்தார்கள், டிப்டி க[...] [...]கள் முதலியவர்களால் நன்குமதிக்கப்பெற்று, தங்கதோட[...] [...]ும், செயின்களும், அனேக பதக்கங்களும் அளிக்கப்பட்டிரு[...] [...]ன் தஞ்சை, மதுரை, மதராஸ், நாகைமுதலிய இடங்களி[...] [...]ந்த தொழிற்காக்ஷிசாலைகளாலும் அநேக பிரமுகர்களாலும் [...] [...]க்ஷி பத்திரம் பெற்றிருக்கிறோம். இனி எழுதினால் தற்புகழ்[...] [...]ும். சரக்குகளை வாங்கி அனுபவித்தால் உண்மை விளங்கும்.

சரக்குகளின் விபரம்.

சந்தனாதி தைலம்.	நயம் ஜவ்வாது.
அரக்கிரை தைலம்.	ஷை புனுகு.
கேஸர் பௌடர்.	ஷை அரகஜா.
பரிமள பாக்குத்தூள்.	ஷை அம்பர்.
கஸ்தூரிசந்தன பௌடர்.	வத்தி வகைகள்.
தணல்தூப தசாங்கம்.	அத்தர் வகைகள்.
ஸ்னானப்பொடி.	உயர்ந்த பன்னீர்.
கலர் கொப்பரைச்சீவல்.	வில்லைகள்.
கலர் சுண்ணாம்பு.	வில்லைமாலைகள்.

இன்னும் அநேக சாமான்கள் நம்மிடம் எப்போது[...] விருக்கின்றன. கியாட்லாக், மேல்கண்ட விலாசத்தி[...] தருவித்துக்கொள்ளவும்.

சில்க்மாலைகளும், நெட்டிமாலைகளும் ஆர்டரின்பே[...] செய்துகொடுக்கப்படும். கல்யாணமுதலிய விசேஷகா[...] ஆர்டரின்பேரில் நேரில்வந்து சரக்குகள் சப்ளைசெய்யப்ப[...]

M. UMARSA SAHIB & SONS,

Manufacturing Perfumers.

Ayyankadai Tanjore.

நோட்டீஸில் தெரிவித்திருக்கிறபடி கிரமமாக ஒரு மண்டலம் அதாவது 40-நாள் உண்டு வந்தால் இதற்கு முன் எப்போதும் அடைந்திராத ஸ்திரீ சம்போகத்தை யனுபவித்து நீங்காதசந்தோஷத்தை யடைவார்கள். தேகமானது வலுத்து, புதியஇரத்தத்தைப் பெருக்கி சத்ததாதுக்களுக்கும் கொழுமையைக் கொடுத்து, துரித ஸ்கலிதத்தை நீக்கி, இடுப்புக்கு அதிக வலிவைக் கொடுக்கும் இதை ஒரு தரம் பரீக்ஷித்தோர் பின்பு இந்த லேகியத்தை எப்போதும் கைவிடமாட்டார்கள்.

நீத்துப்போன இந்திரியத்தைப் பிசின்போல் கெட்டிப்படுத்தி நெடுநேரம் வரையில் சம்போக சக்தியைக் கொடுக்கும் வல்லமை இந்த உடும்புசத்தின் லேகியத்திற்கு உண்டாயிருப்பது மிகவும் ஆச்சரியகரத்தை உண்டாக்குகிறது.

வியாதியஸ்தரின் சம்போகத்தினுல் வெள்ளை, மஞ்சள்வெள்ளை நீர்சுருக்கு, அறையாப்பு, கொருக்கு, முதலிய நோய்களை வாங்கிக்கொண்டு, அந்தநோய் நீங்கும்பொருட்டுப் பலவித மருந்துகளைத் தின்று அதனுல்வெட்டை அதிகரித்து, இரத்தம் முறிந்து முகம் வெளுத்து, கண கைகால்களின் நெகங்கள் வெளுத்து அன்னத்துவேஷம் அக்கினி மந்தம், கைகால் எரிச்சல், அசத்தி, சோம்பல் முதலிய கொடிய வியாதியுடையார் இராஜவைத்திய பண்டிதரால் தயார் செய்யப்பட்ட இந்த உடும்புசத்தின் லேகியத்தை எண்ணிக்கையாக 40-நாள் யாதொரு பத்தியமுமின்றிச் சாப்பிட்டு வருவார்களானுல், மேற்கண்ட ரோகங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கி பூர்ண சந்திரன் போன்றமுக தேஜஸ்சும், திடகாத்திரமும், வீரியவிருத்தி, ஸ்தம்பனசக்திகளைப் பெற்று, ஆரோக்கிய சம்பன்னராய்ச் சந்தானச் செல்வமைடைந்து மகிழ்வார்கள்.

முக்கிய கவனிப்பு.

அளவுக்கு மிஞ்சினுல் அமுர்தமும் நசிபு என்ற பழமைபோல் எவ்வளவு பிரமாணம் லேகியம் சாப்பிடவேண்டுமோ அவ்வளவு சாப்பிடவேண்டும். இந்த லேகியத்தில் யாதொரு குணமும் உண்டாகவில்லை என்று நிரூபிக்கப்பட்டால் உடனே தங்களுடைய பணத்தை வாபஸ்செய்ய உத்தரவாதம் தருகிறோம்.

ஒரு சேர் (8-பலம்) லேகியத்திற்கு ரூபா 4—0—0.

இரண்டு சேர் (16-பலம்) லேகியத்திற்கு ரூபா 7—0—0.

விலாசம்:—

ராஜேஸ்வரி ஔஷததசாலை,

தபால் பெட்டி நெ. 207, மதராஸ்

றந்த விவஸ! பெருத்த வ...

60–நாளையில்

இங்கிலீஷ் கற்றுங்கொள்ளலாம்.

இதுவரையில், இம்மாதிரியான ‘புத்தகம்’ வெளிவரவில்லை. இது புதுமாதிரியாக இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளக் கூடிய சுலபமான தமிழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது விஷயத்தை யாவரும் கவனித்து எழுதுங்கள்

உடனே எழுதுங்கள்.

ஆங்கில

ஆசான்

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் தெரிந்து கொள்ளலாம்.

உபாத்தியாயர் இல்லாமல் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில் பத்திரங்கள், கல்யாண, சிமந்த, நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும், எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் இங்கிலீஷ் அர்த்தமும் வெகு சுலபமான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன. மாதாகளுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

இப்புத்தகம் விலை ரூ. 2. தபாற் செலவு அணா 8.

பினாங்கு சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால்தான் புஸ்தகம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்படும்.

விலாசம்:—

ராஜேஸ்வரி அண்டு கம்பெனி,

தபால் பெட்டி நெ. 207, மதராஸ்.